**OPEN ACCESS**

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 20.04.2020

Accepted: 28.05.2020

Published: 01.07.2020

Citation:
Kayalvizhy, M. (2020). The Good Kurungi Land. *Shanlax International Journal of Tamil Research*, 5(1), 168–176.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.3414

*Corresponding Author:
kayalarul22@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Good Kurungi Land

**M. Kayalvizhy**
*Assistant Professor, Department of Tamil*
*Pachiyappas College for Women, Kancheepuram, Tamil Nadu, India*

**Abstract -** Kurungi is the first and best land type of Tamils in the Sangam age. It consists hills and forest. The people lived at there were called as Kuravas. This land was beautiful and solitude and it gave everything to that people. The Sangam literature gave brief description about the Kurungi land. The Kurava people leads a simple and happy life and enjoyed the natural of that land. The land was their mother and it provide everything to them for lead a happy life at there.

**Key Words:** Sangam Literature, Kurinji Land, Hills and Forest, Beautiful Nature, Kuravas, Happy Life.

**References**

1. Parimanam.A.M.& Balasubramanyam.K.V, (2007), Nattrinai, Chennai: The New Century Book House (Pvt) Ltd
2. Parimanam.A.M. & Balasubramanyam.K.V, (2007), Agananooru, Chennai: The New Century Book House (Pvt) Ltd
3. Parimanam.A.M. & Balasubramanyam.K.V, (2007), Thirumurugartuppadai, Chennai: The New Century Book House (Pvt) Ltd
4. Parimanam.A.M. & Balasubramanyam.K.V,(2007), Sirupanaruppadai, Chennai: The New Century Book House (Pvt) Ltd
5. Parimanam.A.M. & Balasubramanyam.K.V,(2007), Kuringippattu, Chennai: The New Century Book House (Pvt) Ltd
6. Parimanam.A.M. & Balasubramanyam.K.V, (2007), Mathuraikkangi, Chennai: The New Century Book House (Pvt) Ltd
7. Parimanam.A.M. & Balasubramanyam.K.V, (2007), Pattinappalai, Chennai: The New Century Book House (Pvt) Ltd
8. Parimanam.A.M. & Balasubramanyam.K.V, (2007), Malaipadukadam, Chennai: The New Century Book House (Pvt) Ltd
9. Tamil Nadu Varalaru Sangakaalam, (1983), Chennai: Tamil Nadu Text Book Corporation.

# குறிஞ்சி நிலமென்னும் நல்லாள்

*மு. கயல்விழி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பச்சையப்பன்மகளிர்கல்லூரி, காஞ்சிபுரம்

***ஆய்வுச்சுருக்கம்:*** *சங்கக்கால நிலவகைகளில் சிறப்பு வாய்ந்ததது குறிஞ்சி நிலமாகும். இது மலையும் மலைசார்ந்த பகுதியாகும். இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் குறவர் என்று அழைக்கப்பட்டனர். இப்பகுதி எழில் கொஞ்சும் பகுதியாகும். இது எல்லா வகைவளங்களையும் நலங்களையும் இம்மக்களுக்கு வழங்கியது. இவற்றைப்பற்றி சங்க இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன. குறிஞ்சி இனமக்கள் எளிமையான வாழ்க்கையை நடத்தினர். அவர்கள் இயற்கையை நேசித்து வாழ்ந்தனர். இந்நிலம் இவர்களுக்குத் தாயாகவிளங்கியதால் இவர்கள் மகிழ்ச்சியான வாழ்க்கையை நடத்துவதற்கு அது எல்லாவிதத்திலும் உதவியது.*

***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், குறிஞ்சி நிலம் மலையும் மலைசார்ந்த பகுதி, இயற்கை அழகு, குறவர்கள், மகிழ்ச்சியான வாழ்க்கை*

## முன்னுரை

தமிழர்கள் நிலத்தின் வகைக்கேற்ப அவற்றை ஐவகையாகப் பிரித்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும். அவற்றில் சிறப்பு வாய்ந்தது குறிஞ்சி நிலமாகும். மலையும் மலை சார்ந்த பகுதியே குறிஞ்சியாகும். தமிழகத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் மலை உள்ளது என்பதால் குறிஞ்சி நிலம் சிறப்பிடம் பெற்றது (ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் மலைகளே கிடையாது). இது அக்காலத்தில் சிறப்பாகக் கருதப்பட்டதால் முதலிடத்தில் வைத்துப் போற்றப்பெற்றது. பாழடைந்த பாலை நிலம் இறுதி இடம் பிடித்தது. தமிழ்க்கடவுளாம் முருகப் பெருமான் குறிஞ்சிநிலத்தின் தெய்வம் என்பதால் இத்திணை முதலில் வைக்கப் பெற்றிருக்கக்கூடும். இங்குக் குறிஞ்சி மலர்கள் நிறைந்து பூத்ததால் குறிஞ்சித்திணை என்று பெயர் பெற்றது. இதுமலைப்பகுதி என்பதால் தனிமை நிறைந்தது. எனவே அறிவு சார்ந்த முன்னோர்கள் இத்திணைக்குக் களவொழுக்கத்தை வகுத்தளித்தனர். மலைப்பகுதியானது இயற்கை வளம் நிறைந்தது, பாதுகாப்பானது, எழில் நிறைந்தது. குறிஞ்சியின் எழிலையும், சிறப்பையும் சங்க இலக்கியங்கள் சிறப்பித்துப் பாராட்டுகின்றன. கபிலர், பரணர் போன்ற சங்கப்புலவர் பெருமக்கள் குறிஞ்சித்திணையைப் பாடுவதில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர்.

## குறிஞ்சி நிலம்

குறிஞ்சி நிலம் மலைப்பகுதியாகும். இது காடுகளுடன் சேர்ந்து காணப்பட்டது. எனவே இது மலைக்காடுகள் என்று அழைக்கப்பட்டது. இந்நிலத்தின் தலைவன் வெற்பன், பொருப்பன், சிலம்பன் என்று அழைக்கப்பட்டான். தலைவி கொடிச்சி என்று அழைக்கப்பட்டாள். இந்நில மக்கள் குறவர், குன்றுவர், கானவர், வேட்டுவர் என்று அழைக்கப்பட்டனர். அந்நிலப் பெண்டிர் குன்று வித்தியர், வேட்டு வித்தியர், குறத்தியர் என்று அழைக்கப்பட்டனர். இம்மக்கள் திணை முதலிய பயிர்களைப் பயிரிட்டும், தேனெடுத்தும், கிழங்குகளைச் சேகரித்தும், வேட்டையாடியும் வாழ்க்கையை நடத்தி வந்தனர். இவர்கள் இசைநுட்பம் வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள்

குறிஞ்சியாழ், தொண்டகப்பறை, முருகியம் போன்ற இசைக் கருவிகளை இசைத்து மகிழ்ந்தனர். இவர்களின் பண் குறிஞ்சிப் பண்ணாகும். இங்குள்ள மலையில் அகில், சந்தனம், மூங்கில், பலா, சுரபுன்னை, வாழை, மாமுதலிய மரங்கள் செழித்து வளர்ந்தன. மலைப்பகுதி என்பதால் இங்கு மிளகுக் கொடிகள் நிறைந்து காணப்பட்டன. இது தவிரக் காந்தாள் மலர், வேங்கை மலர், குவளை மலர், குறிஞ்சி மலர் போன்ற மலர்களும் பூத்தன. குரங்குகள், யானைகள், கரடிகள், புலிகள், காட்டுப்பன்றிகள், காட்டுப்பசுக்கள், வரையாடுகள் முதலிய விலங்குகளும் கிளிகள், மயில்கள் முதலிய பறவைகளும் இங்கு வாழ்ந்தன.

### குறிஞ்சியின் இயற்கையழகு

மலைகள் எப்பொழுதும் இயற்கை அழகு நிரம்பியது. அங்கு அருவிகள் கீழ்நோக்கிப் பாய்ந்தோடும். அவை பேரிரைச்சலிட்டுக் கொண்டு கீழேவிழும். அவை மலைகளில் காணப்படும் தேன்கூட்டைச் சிதைத்துக் கொண்டும், வெடித்துச் சிந்தும் பலாப்பழங்களை அடித்துக்கொண்டும் செல்லும். மலைகளின் மேலுள்ள சுரபுன்னை மலர்களும் நீரில் அடித்துக் கொண்டு வரப்படும். இந்த அருவியில் யானையின் தந்தங்கள், பொன்மணிகள் யாவும் அடித்துக் கொண்டு செல்லப்படும். இதுதவிர வாழையின் குலைகளையும், தென்னம் பழங்களையும் மோதி எடுத்துச் செல்வதுடன், கரிய மிளகுக் கொடிகளையும் அடித்துக்கொண்டு செல்லும். இந்த நீரோசையினைக் கேட்டுக் கருங்குரங்குகள் அஞ்சி நடுங்கும். இந்த மலை நீரின் வேகத்தையும், பேரிரைச்சலையும் கேட்டு மயில்களும், கோழிகளும் வெருண்டோடும். பன்றிகளும், கரடிகளும் குகைகளில் பதுங்கும். பசுக்களும், எருதுகளும் அஞ்சி முழக்கமிடும் (திரு.முரு:295-317). மலைகளில் உள்ள சுனைகளில் எப்பொழுதும் நீர்நிறைந்து காணப்படும். அவை தெளிந்தும், இனிய சுவை பயப்பதாகவும் காணப்படும். அந்தச்சுனை நீரில் மரத்திலிருந்து விழும் மாங்கனிகளும், வெடித்துச் சிதறும் பலாக்கனிகளும் விழுந்து நீரைத் தேன்போல் மாற்றும். இந்தச்சுவை மிகுநீரை உண்ட மயில்கள் போதையில் பறக்க முடியாமல் தள்ளாடும்.

> **ஆகம் அடைய முயங்கலின் அவ்வழி**
> **பழமிளகு உக்கபாறை நெடுஞ்சுனை**
> **முழு முதற்கொக்கின் தீன்கனி உதிர்ந்தன**
> **புள்எறி பிரசமொடு ஈண்டி பலவின்**
> **நெகிழ்ந்து உகுநறும் பழம் விளைந்ததேரல்**
> **நீர்செத்து அயின்ற தொகைவியல் ஊர்ச்**
> **சாறுகொள் ஆங்கன் விழவுக்களம் நந்தி**
> **அறிக்கூட்டு இன்இயம் கரங்க ஆடுமகள்**
> **கயிறு ஊர்பாணியின் தளரும் சாரல்**
> **வரைஅற மகளிரின் சாஅய்வழைதக**
> **விண்பொரும் சென்னுக்கீளை இயகாந்தள்**
>
> **(கு.பா:186-194)**

இதே போன்று வாழையின் கனிகளும், பலாவின் சுளைகளும் ஒன்றாகச் சேர்ந்ததால் சுனைநீர் தேனாக மாறியது. இதனை அறியாமல் உண்ட குரங்குகள் போதையில் தடுமாறி, மரமேற முடியாமல் தள்ளாடிச் சந்தன மரநிழலில் படுத்துறங்கும்.

> **கொழிலை வாழைக் கெபள் முதிர்பெருங்குலை**
> **ஊழுறுதீம் கனி உண்ணு நர்த்தடுத்த**
> **சாரர்பலவின் சுளையோடு ஊழ்படு**
> **பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்**
> **அறியாது உண்டகடுவன் அயலது**
> **கறிவளர் சாத்தம் ஏறல்செல்லாது**
>
> **(அகம்:2.1-6)**

### குறிஞ்சி நிலஆடவரின் தொழில்கள்

குறிஞ்சி நிலம் முழுவதும் சிறுகுடிகள் எனப்பட்ட ஊர்கள் காணப்பட்டன. அங்குச் சிறுகுடிசைகள் அமைத்துக்கொண்டு குறிஞ்சிநில மக்கள் வசித்தனர். அவர்கள் தோள்களில் யானைக் கொம்புகளால் செய்த காவடிகளைச் சுமந்துகொண்டு காடுகளுக்குச் செல்வர்.

அங்கு மலைத் தேனையும், கிழங்குகளையும், பன்றி இறைச்சியையும் சேகரித்துக் கொண்டு வருவர். அகில், சந்தனம் முதலிய மரங்களை வெட்டி நிலத்தைச்சமன் செய்து பயிர் விளைவிப்பர். அங்குத் தோரை நெல், வெண்சிறுகடுகு, ஐவனநெல், இஞ்சி, வெண்நெல், மஞ்சள், மிளகு போன்றவற்றைப் பயிரிடுவர்.

**நறுங்காழ் கொன்று கோட்டினவிந்திய**
**குறுங்கதிர் தோரை நெடுங்கால் ஐயவி**
**ஐவன வெண்நெல்லோடு அரில்கொள்புநீடி**
**இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்**
**பல்வேறு தாரமோடு கல்லகத்து ஈண்டி**
**தினை விளைசாரற்கிளிகடிபூசல்**
**மணிப்பூ அவரைக் குரூஉத்தளிர் மேயும்**
**ஆமாகடியும்கானவர்பூசல்**

**(ம.கா:286-293)**

நன்கு விளைந்த பயிரைக் காக்கத் தினைப்புலம் காப்பர். இதற்காகப் பெரிய மரங்களில் பரண்களை அமைப்பர். பயிர்களை உண்ணவரும் கிளிகள், குருவிகள், கரடிகள், யானைகள், பன்றிகள் முதலிய விலங்குகளைக் கவண்கல் கொண்டும், பறையோசை உண்டாக்கியும் விரட்டுவர். இரவு நேரத்தில் பந்தங்களைக் கொளுத்திக் கொடிய விலங்குகளை விரட்டுவர். இதற்காகக் கவண் மற்றும் தட்டை போன்ற கருவிகளைப் பயன்படுத்தினர். பகலில் தினைப்புலம் காக்க மகளிரும், இரவில் ஆடவரும் பணியாற்றினர் (கு.பா:35-44).

இம்மக்கள் காட்டுப் பன்றிகளைப் பொறிவைத்துப் பிடிப்பதில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். அவற்றைப் பிடிக்கக் குழிகளைத் தோண்டிக் கம்புகளாலும், தழைகளாலும் மூடிவைப்பர். குழிகள் தெரியாமல் ஓடி அதனுள் விழும் பன்றிகளை வேலெறிந்தும், அம்பெய்தும் கொல்வர்.

**சேணோன் அகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்**
**வீழ் முகக்கேழல் அட்டபூசல்**

**(ம.கா:294-95)**

யானைகளும் தினைப்பயிர்களை உண்ணவரும் என்பதால் அவற்றை அம்பெய்து விரட்டுவர். விலங்குகளை விரட்ட வாயை மடித்துச் சீட்டியொலி உண்டாக்கிக் களிறுகளை விரட்டியடிப்பர் (கு.பா:156-161). இம்மக்கள் பன்றிகளைக் குழிதோண்டிப் பிடிப்பது போன்றே யானைகளையும் குழிதோண்டிப் பிடிப்பர் (ப.பாலை:221-224). மலைநாட்டு மக்கள் கடின உழைப்பாளிகள். இவர்கள் பல்வகைப் பயிர்களை நன்கு வளர்ந்தனர். அவர்தம் நிலங்களில் எள், தினை, அவரை, வரகு, மூங்கில்நெல், வெண்கடுகு, சிறுகடுகு, இஞ்சி, மஞ்சள், வாழை, கூவைக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, ஆசினிப்பலா, கரும்பு, ஐவனநெல், வெண்நெல் முதலிய பயிர்கள் செழித்து வளர்ந்தன (மலை.படு:102-117). மேலும் மலைகளில் அகிலும், சந்தனமும் நன்கு செழித்தன. அத்துடன் மலைகளில் பொன்னும், மணியும் தாரளமாகக் கிடைத்தன (மலை.படு:170). குறிஞ்சி நில மக்கள் தேனெடுத்தலை முக்கியத் தொழிலாகக் கொண்டனர். மூங்கில் ஏணிகளைச் செய்து சாத்தி வைத்து மலை உச்சியில் உள்ள தேனை எடுப்பர்.

**கலை கையற்ற காண்பு இன்நெடு வரை**
**நிலைபெய்து இட்டமால்பு நெறியாக**
**பெரும்பயன் தொகுத்ததேம் கொள் கொள்ளை**

**(மலை.படு:315-317)**

**குறிஞ்சி நிலமகளிரின் தொழில்கள்**

குறிஞ்சி நிலஆண்களைப் போன்றே பெண்களும் கடின உழைப்பாளிகள். ஆண்களுக்குத் துணையாகப் பெண்களும் பணிபுரிந்தனர். மணமான பெண்கள் இல்லம் காத்தனர். இளம் பெண்கள் தினைப்புலம் ஓட்டினர். ஓய்வு நேரங்களில் சுனைகளிலும், அருவிகளிலும் நீராடி மகிழ்ந்தனர். குறவர் இன மகளிர் கூந்தலை ஒப்பனை செய்வதில் பல்வகையான நுட்பங்களைக் கையாண்டனர் (கு.பா:138-139). அவைகள்வருமாறு:-

1. குழல்
2. அளகம்
3. கொண்டை
4. பணிச்சை
5. துஞ்சை

இவைதவிரப் பல்வகையான கொண்டைகளை முடிச்சிட்டும் அழகுபடுத்தினர். சான்றாக வாழைப்பூ போன்று தலைமுடியை அழகுபடுத்துதல் பணிச்சை எனப்பட்டது (சிறு.பா:21-22). இளம் மகளிர் பல்வகையான மலர்களைக் கூந்தலுக்குச் சூடிமகிழ்ந்தனர். பெண்கள் பூக்களின் புறஇதழ்களை நீக்கிவிட்டு அவற்றைத் தாழை உடைகளாக்கி இடைகளில் அணிந்து கொண்டனர். பல்வேறு பூக்களைத் தொடுத்து மாலையாக்கிச் சூடிமகிழ்ந்தனர் (கு.பா:54-104). குறிஞ்சி நிலமகளிர் மான் தோலால் செய்யப்பட்ட சிறுபறையொலிக்க குறவைக் கூத்தும் நிகழ்த்துவர். திணையைக் குற்றிய குறமகளிர் வள்ளைப் பாட்டும் பாடுவர்.

**நறவு நாட்செய்த குறவர்தம் பெண்டிரோடு**
**மான்தோற் சிறுபறை கறங்கக் கல்லென**
**வான்தோய் தீமிசை அயரும் குறவை**
**(மலை.படு:320-22)**

### குறிஞ்சி நிலத்தின் பல்வகைக் காட்சிகள்

கதிரவன் மாலைப்பொழுதில் மறையும் போது குறிஞ்சி நிலம்புதுப் பொலிவு பெற்றது. மான்கள் மரத்தடியில் கூடும். பசுக்கள் கன்றுகளை அழைக்கும். அன்றில் பறவைகள் தன் இணைகளைப் பனை மடலிலிருந்து அழைக்கும். பாம்புகள் மாணிக்கத்தை வெளியே உமிழ்ந்து இரைதேடப் புற்றிலிருந்து வெளியே வரும். பார்ப்பனர்கள் அந்திக்காலப் பூசையை நிகழ்த்துவர். மகளிர் தம் மனைகளில் விளக்கேற்றித் தெய்வத்தை வழிபடுவர். காடுகளில் பணிபுரிவோர் தீக்கடைக் கோலால் நெருப்பை எரித்துக்காட்டுவர். மலை உச்சியில் கருமேகங்கள் ஒன்று திரண்டு முழங்கும். காட்டில் உள்ள பல்வகை விலங்குகள் பேரோசையை எழுப்பும். பல்வகைப் பறவைகள் கூடுகளிலிருந்து கலகல என்று ஆரவாரம் செய்யும்.

**விண்தோய் பணவை மிசைஞெகிழிபொத்த**
**வானம் மாமலை வாய்சூழ் புகறுப்பகானம்**
**கல்லென்று இரட்டபுள்ளினம் ஒலிப்ப**
**(கு.பா:225-228)**

இது மலையும் காடும் சேர்ந்த பகுதி என்பதால் பல்விதக் கொடிய விலங்குகள் இறைதேட வெளியே வரும். இரவு நேரங்களில் புலிகள், யாளிகள், கரடிகள், காட்டெருதுகள், களிறுகள் மற்றும் மலைப் பாம்புகளும் இரைதேட அலைந்து திரியும். நீர்நிலைகளில் வாழும் முதலைகளும், காராம் பசுக்களும் வெளியில் வந்து காத்திருக்கும். இதுதவிர வழிப் பறிக்கொள்ளையர்கள் கைகளில் கொலைக் கருவிகளுடன் மறைந்து நிற்பர். தம் கைகளில் அகப்படுவோரிடம் பொருள் பறித்துத் துன்புறுத்துவர்.

**அளைச்செறி உழுவையும் ஆளியும் உள்ளியமும் கங்குல்**
**புழற்கோட்டு ஆமான்பு கல்வியும் களிறும்**
**வலியின் தப்பும்வன் கண்வெஞ்சினத்து**
**உருமும்சூரும் இரைதேர் அரவமும்**
**ஒடுங்கு இருங்குட்டத்து அருஞ்சுழி வழங்கும்**
**கொடுந்தாள் முதலையும் இடங்கரும் காராமும்**
**நூழிலும் இழுக்கும் ஊழ் அடிமுட்டமும்**
**பழுவும் பாந்தளும் உளப்படப் பிறவும்**
**(கு.பா:251-59)**

### குறிஞ்சி நில மக்களின் பரிசில்கள்

குறிஞ்சிநில மக்கள் கொடை உள்ளம் கொண்டவர்கள். நாடி வரும் விருந்தினரை நன்கு உபசரித்து ஆதரிக்கும் வள்ளல்கள். அவர்கள் வந்தாருக்குப் பரிசளிக்கப் பல்விதப் பொருள்களை வைத்திருந்தனர். அவற்றை அரசர்களுக்கும், புலவர்களுக்கும், பாணர்களுக்கும், விறலியருக்கும், கூத்தர்களுக்கும் வாரி வழங்கி மகிழ்ந்தனர். இப்பரிசு பொருள்களில் ஆமான்குழவி, யானைக்கன்று, கரடிக்குட்டி, மலையாட்டுகிடாய், கீரிப்பிள்ளை, மறையானின்குழவி, ஆண்உடும்பு, தோகைமயில், காட்டுச்சேவல், பலாப்பழங்கள், மாங்கனிகள், நரைக்கொடிகள், நுரைக்கிழங்குகள், கர்ப்பூரம், மாணிக்கக்கற்கள், யானைத்தந்தங்கள்,

காந்தாள் மலர்கள், புன்னை மலர்கள், திலகமலர்கள், சந்தனக் கட்டைகள், மிளகுகள், தயிர், தேனிறால்கள், ஆசினிப் பலா போன்றவை அடங்கும். குறிஞ்சிநிலத்திற்கே உரிய இப்பொருட்களைக் குறவர்கள் பரிசிலாக வழங்கி மகிழ்ந்தனர் (மலை.படு:498-529).

## குறிஞ்சி நிலத்துப் பல்வகை ஓசைகள்

குறிஞ்சி நிலம் தனிமையும், அமைதியும் நிறைந்த பகுதி என்பதால் விலங்குகள் எழுப்பும் பல்வகை ஓசைகள் அந்நிலம் முழுதும் எதிரொலிக்கும். அந்நிலத்தில் தோன்றும் பல்வகை ஓசைகளை இலக்கியங்கள் பட்டியலிட்டுக் காட்டும். புலி ஏறானது மலைப்பகுதியில் களிற்றுடன் போர் புரிவதினால் தோன்றும் முழக்கமும், இதனைக் கண்ட குறவர் இனச்சிறார்கள் மகிழ்வுடன் தொண்டகப் பறையை முழக்குவர்,

**பூம்பொறி உழுவைப் பேய்வாய் ஏற்றை**
**தேம்கமழ் சிலம்பின் களிற்றோடு பெரினே**
**துறுக்கல் மீமிசை உறகண் அஞ்சாக்**
**குறக்குறு மாக்கள் புகற்சியின் எறிந்த**
**தொண்டகச் சிறுபறைப் பாணி அயலது**
**(நற்.104.1-5)**

தன்பிடியைப் பிரிந்த ஆண்யானை எழுப்பும் ஓசையும். புலி களிற்றின் மீது பாய்வதால் வேதனையுற்ற அதன் இணை எழுப்பிய வேதனை பிளிறலும். தன்குட்டி கீழே விழுந்து இறந்ததைக் கண்டு மந்தி எழுப்பிய வேதனைக் குரலும், எருமைக்கிடாக்கள் மோதும்போது உண்டாகும் ஓசையும் தெளிவாகக் கேட்கும். இதுதவிரப் பன்றி வேட்டையின் போது கொல்லப்பட்ட தன் துணைவருக்காக வேட்டுவர் எழுப்பும் வேதனைக்குரலும், புலியுடன் போரிட்டுக் காயமடைந்த கணவனுக்காக மனைவி எழுப்பும் துயரப்பாடலும், வேங்கை மலர்களைப் பறித்த மகளிர் எழுப்பிய புலிபுலி என்ற கூக்குரலும், தேனெடுத்த பின் ஆடவர் எழுப்பிய ஆரவார எக்காள ஓசையும், அவர்கள் பகைவரின் குடில்களை அழித்த போது எழுப்பிய மகிழ்ச்சி ஆரவாரமும், குறவர்கள் சிறுபறையை எழுப்பிக் குறவை கூத்தாடிய ஓசையும், மூங்கில் தட்டிகளைத் தட்டித்திணை புனத்தில் இருந்த இளமகளிர் எழுப்பிய ஓசையும், காட்டெருதும் மானும் சண்டையிட்டபோது வேட்டுவர் எழுப்பிய ஆரவார ஓசையும், எருமைக்கிடாக்களையும் கன்றுகளையும் விரட்டிச் செல்லும் சிறார்கள் எழுப்பும் ஓசையும், கரும்பாலைகளில் இருந்து இனிய மணத்துடன் எழும்பும் ஆலையோசையும், தினை குற்றும் மகளிர் பாடும் வள்ளைப்பாட்டும், காட்டுப் பன்றியை வேட்டையாட வேட்டுவர் எழுப்பும் ஓசையும், அருவிகள் கீழே விழுவதால் தோன்றும் இழும் என்ற ஓசையும் அதில் தெய்வ மகளிர் நீராடுவதால் தோன்றும் ஓசையும் குறிஞ்சிநிலத்தில் நன்கு ஓசையுடன் கேட்டன (மலை.படு:294-344).

## குறிஞ்சிநிலத் தெய்வம் முருகன்

குறிஞ்சிநிலத் தெய்வம் முருகப் பெருமானாவான். அவன் தமிழ்க்கடவுளாகப் போற்றப்படுகின்றான். இம்முருகக்கடவுள் குறிஞ்சி நிலமக்களால் போற்றி வழிபாடு செய்யப்பட்டான். இவன் கார்த்திகை மாதர்களால் வளர்க்கப்பட்ட சிறப்புடையவன். இவன் ஆறு பருவங்களைக் கொண்டவனாகவும், சிவனின் புதல்வனாகவும் போற்றப்பட்டான். பகைவருக்குக் கூற்றம் போன்ற இவன் தேவர் படைத்தலைவனாகவும், தமிழறிந்த மாமேதையாகவும், தெய்வயானை மற்றும் வள்ளியின் கணவனாகவும், வேற்படைக்குத் தலைவனாகவும், கிரௌஞ்ச மலையைப் பிளந்தவனாகவும், வீடுபேற்றை அருள்பவனாகவும், தேவரும் முனிவரும் வழிபடுபவனாகவும் போற்றப்பட்டான். இவன் சூரபத்மன் குலத்தை அழித்தால் மதவலி என்று பெயர்பெற்றான். இவன் பொன்னால் செய்த அணிகலன்களை அணிந்து, மெய்ஞான அறிவுடன் விளங்கியவன் என்று நக்கீரர் பெருமான் இவனைப் புகழ்வார். இத்தகு முருகப்பெருமானைக் குறிஞ்சி நிலமக்கள் நாளும் பக்தியுடன் வழிபட்டு வந்தனர். இவ்வழிபாட்டிற்குப் பல்வகைச்

சடங்குகள் நிகழ்த்தப்பட்டன. குறிஞ்சி இனப்பெண்கள் முருகனை வழிபடும் இடத்தை நன்கு தூய்மை செய்வர். கோழிக் கொடியை இவ்விடத்தே நட்டு வைப்பர். அதில் நெய்யுடன் வெண்கடுகை அப்புவர். முருகனின் வழிபாட்டு மந்திரத்தை உச்சரித்து முருகனைப் போற்றுவர். அப்பெண்கள் சிவந்த நூலைக் கையில் காப்பாகக் கட்டி வெள்ளிய பொறியைத் தூவிப் பலியிட்ட ஆட்டுக்கிடாவின் இரத்துடன் கலந்த வெண்ணரிசியை நிவந்தனப் பொருளாக இட்டு வைத்து அவனை வழிபடுவர். மஞ்சளுடன் சந்தனத்தையும் நன்கு தெளித்துப் பெரிய செவ்வலரி மாலைகளைத் தொங்கவிட்டுக் கொண்டு தான் வசிக்கும் பகுதியில் பசியும் பிணியும் நீங்கவேண்டும் என்று வழிபடுவர். பின் சேவல் கொடிக்குத் தூபம் காட்டியும், முருகனைத் துதிபாடியும் வழிபட்டனர். அவ்வமையம் பல்லிகள் ஒலி எழுப்பின, கொம்புகள் முழங்கின, மணிகள்ஒலித்தன. அவர்கள் பிணிமுகம் என்ற யானையை (தற்போதைய மயிலன்று) வாழ்த்தி முருகனை வழிபட்டுப் பக்திபாக்கள் பல பாடி மகிழ்ந்தனர் (திரு.முரு:227-248).

## குறிஞ்சி நிலத்து வெறியாடல்

பழந்தமிழரின் சிறப்பு வேலன் வெறியாடுதல் ஆகும். இது குறிஞ்சி நிலத்திற்கே உரிய வழிபாட்டு முறையாகும். குறவர் இனத்துப் பூசாரி முருகனைப் போன்று வேடமிட்டுக் கொண்டு ஆடிப்பாடுதல் வெறியாட்டம் எனப்படும். நோய் முருகனால் வந்தது என்று இம்மக்கள் நம்பியதால் இவ்வகை வழிபாட்டு முறை நிகழ்த்தப்பட்டது. பூசாரியுடன்குறவரும்கூத்தாடி மகிழ்ந்தனர். வேலன் வேடமிடுபவன் சாதிக்காய், தக்கோலக்காய், காட்டு மல்லிகை, வெண்டாலி மலர் போன்றவற்றைச் சேர்த்துக் கட்டிமாலையாக்கி அணிந்திருப்பான். அவன் சிவந்த நிற ஆடையை அணிந்தும், கச்சையும் கட்டி, காலணி அணிந்தும், காதுகளில் அசோகத்தளிரையும் சூடியிருப்பான். இத்துடன் மார்பில் வெட்சிமாலையும் சூடியிருப்பான். இந்நிகழ்வின் போது குழல், கொம்பு, மற்றும் பல்லியங்களை ஊதிக்குறவர் இசை முழக்குவர். வேலன் சேவல் கொடியைத் தோளில் சுமந்து குறமகளிருடன் கைகோர்த்துக் கூத்தாடுவான். இந்நிகழ்வின் போது குறவர்கள் மூங்கிலிலிருந்த தேனை உண்டும், தொண்டகப் பறையை இசைத்தும் கூத்தாடி முருகனை வழிபடுவர். அக்காலத்தில் குறவர் முருகனை சிறப்பாக வழிபட்டாலும் அவனைத் தனிக்கோவில்களில் வைத்து வழிபடாமை உணரத்தக்கது. எனவே, சங்கக்காலத்தில் முருகனுக்குக் கோவில்கள் இல்லை என்றே தோன்றுகின்றது. குரவர்கள் முருகனை ஆட்டுக்கிடாவை அறுத்து வழிபடும் இடங்களிலும், அடியார்கள் தொழுத இடங்களிலும், வெறியாடும் இடங்களிலும், காட்டிலும், மேட்டிலும், பொழில்களிலும், ஆற்றோரங்களிலும், குளக்கரைகளிலும், ஊர்களிலும், நாற்சந்திகளிலும், முச்சந்திகளிலும், ஐஞ்சந்திகளிலும், கடம்பமரம்தோறும், ஊர்நடு மரத்தடியிலும், அம்பலத்திலும், குறமகள் வழிபடும் இடங்களிலும் முருகப்பெருமானுக்கு உரிய இடமாகக் கருதிக் குறவர்கள் அவனை வழிபட்டனர்.

> **ஊர்ஊர் கொண்ட சீர்கெழுவிழவினும்**
> **ஆர்வலர் ஏத்தமே வருநிலையிலும்**
> **வேலன்தை இயவெறி அயர்களனும்**
> **காடும் காவும் கவின் பெறுதுருத்தியும்**
> **யாறும் குளனும் வேறுபல்வைப்பும்**
> **சதுக்கமும் சந்தியும் புதுப்பூங்கடம்பும்**
> **மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையிலும்**
> ***(திரு.முரு:220-226)***

இருந்த போதிலும் திருப்பரங்குன்றம், ஆவினன்குடி, ஏரகம் போன்ற மலைப்பகுதிகளில் முருகன் வழிபடும் தலங்கள் இருந்தன என்பது இலக்கியங்களால் அறியப்படும். அது எத்தகையது என்று அறியக்கூடவில்லை.

## முடிவுரை

நிலங்களையும் மனிதரையும் எக்காலத்திலும் பிரிக்கவியலாது. அவர்கள் எல்லா நிலையிலும் மண்ணோடு பிணைக்கப்பட்டவர்கள். மண்ணின் இயல்புக்கேற்ப மனிதரின் வாழ்க்கை முறையும் அமைகின்றது. எனவே தான் நிலங்களைக்கொண்டு பழந்தமிழர் வாழ்க்கைமுறையை வகுத்தளித்தனர். இத்தமிழர் நிலங்களில் முதன்மையானது குறிஞ்சி நிலமாகும். இது கரடுமுரடான பகுதி என்பதால் அங்கு வாழ்ந்த மக்கள் கரடுமுரடான வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டவர்கள். அவர்கள் கடின உழைப்பாளிகளாகத் திகழ்ந்ததுடன் எளிய வாழ்வுக்கும் பழக்கப்பட்டனர். இவ்வளவு பெரிய இயற்கை இடர்கள் இருந்த போதிலும் குறிஞ்சி நிலமக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கையே வாழ்ந்தனர். தமக்கு அமைந்த கடினமான குறிஞ்சி நிலத்திற்குத் தக்கவாறு வாழ்க்கையை அமைத்துக்கொண்டும், அச்சூழலைத் தமக்குச் சாதகமாக மாற்றிக்கொண்டும் வாழ்ந்தனர்.

இம்மக்களில் ஆண்களுக்குச் சரிநிகராகப் பெண்களும் உழைத்தனர். ஆணும், பெண்ணும் கடுமையாக உழைத்ததினால் தான் கடுமையான அந்தச் சூழலை வென்று வாழ முடிந்தது. ஒருவகையில் பார்த்தால் குறிஞ்சி நிலம் அவர்களுக்கு நற்பேறாய் அமைந்தது என்றே சொல்லாம். மலைகள் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் எதிரிகள் எளிதில் அணுக இயலாவண்ணம் அரண்களாய்த் திகழ்ந்தன. அங்குக் கிடைத்த பல்வேறு காய்களும், கனிகளும், விலங்குகளும் அவர்களுக்கு உணவாகப் பயன்பட்டன. யானைத் தந்தங்கள் அணிமணியாகச் செய்வதற்கும், விலைமதிப்பான பொருளாகவும் திகழ்ந்து அவர்களின் செல்வநிலையை உயர்த்தின. தேன், தினை அரிசி போன்றவை அவர்கள் உடல் ஆரோக்கியத்தைப் பலப்படுத்தின. நீர் அருவிகளும், மலைச் சுனைக் குளியல்களும் அவர்களுக்கு மனமகிழ்வையும், புத்துணர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் ஊட்டின. மலைத்தெய்வமான முருகப்பெருமான் அவர்களுக்குப் பக்தியை ஊட்டினான். இத்திணையில் காணப்படும் களவொழுக்கம் அவர்கள் இல்வாழ்க்கை புரிதலுக்கு அடிப்படையாய் அமைந்தது. குறிஞ்சி நிலம் குறவரின் வாழ்வியலின் ஒவ்வொரு நிலையிலும் பங்கேற்று அவர்களுக்கு உதவிபுரிவதாகவே அமைந்தது.

இயற்கை வளமும், அழகு நலமும், தனிமைச் சிறப்பும், செல்வச் செழிப்பும் மிகுந்திருந்ததால் பிற திணைகளைவிடக் குறிஞ்சித்திணை சிறப்புடன் போற்றப்பட்டது. எனவேதான் குறிஞ்சித்திணை குறித்து ஏராளமான சங்கப் பாடல்கள் தோன்றிச் சிறப்புபெற்றன. மனிதன் இயற்கை இடர்களை வென்று அவற்றைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு வாழ்ந்தான் என்பதற்குக் குறிஞ்சி நிலமும், குறிஞ்சி இனமக்களுமே சாலச் சிறந்த சான்று. கடினமும், தனிமையும், அழகும், வளமும் மிகுந்த நிலமென்னும் நல்லாள் ஆரம்பத்தில் அம்மக்களுக்குக் கடினத்தையும், துன்பத்தையும் வழங்கினாலும், பின்பு அவள் அவர்களுடைய வாழ்க்கை செழிக்க உறுதுணையாய் நின்றாள் என்பதே பழந்தமிழ் குறிஞ்சி நிலமாந்தர் வாழ்வியல் நிலை உணர்த்தும் வாழ்க்கைப் பாடமாகும்.

## பார்வைநூற் பட்டியல்

1. பரிமணம். அ.மா. பாலசுப்பிரமணியன். கு.வெ. (பதி), (2007), நற்றிணை, சென்னை: நியூசெஞ்சூரிபுக்ஹவுஸ் லிமிடெட்
2. பரிமணம். அ.மா. பாலசுப்பிரமணியன். கு.வெ. (பதி), (2007), அகநானூறு, சென்னை: நியூசெஞ்சூரிபுக்ஹவுஸ் லிமிடெட்
3. பரிமணம். அ.மா. பாலசுப்பிரமணியன். கு. வெ. (பதி), (2007), திருமுருகாற்றுப்படை, சென்னை: நியூசெஞ்சூரிபுக்ஹவுஸ் லிமிடெட்
4. பரிமணம். அ. மா. பாலசுப்பிரமணியன்.

கு. வெ. (பதி), (2007), சிறுபாணாற்றுப்படை, சென்னை: நியூசெஞ்சூரிபுக்ஹவுஸ் லிமிடெட்

5. பரிமணம். அ. மா. பாலசுப்பிரமணியன். கு.வெ.(பதி),(2007),குறுஞ்சிப்பாட்டு,சென்னை: நியூசென்சூரிபுக்ஹவுஸ்லிமிடெட்
6. பரிமணம். அ. மா. பாலசுப்பிரமணியன். கு. வெ. (பதி), (2007), மதுரைக்காஞ்சி, சென்னை: நியூசெஞ்சூரிபுக்ஹவுஸ் லிமிடெட்
7. பரிமணம். அ. மா. பாலசுப்பிரமணியன். கு. வெ.(பதி), (2007), பட்டினப்பாலை, சென்னை: நியூசெஞ்சூரிபுக்ஹவுஸ் லிமிடெட்
8. பரிமணம். அ. மா. பாலசுப்பிரமணியன். கு. வெ.(பதி), (2007), மலைபடுகடாம், சென்னை: நியூசெஞ்சூரிபுக்ஹவுஸ் லிமிடெட்
9. தமிழ் நாட்டு வரலாறு - சங்ககாலம், (1983), சென்னை: தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம்.